பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**12 11 2025 WEDNESDAY 12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரதமர் திரு நரேந்திர மோடி, திம்புவில் பூட்டானின் நான்காவது மன்னர் திரு **Jigme Singye Wanchuck**-ஐ சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

**2.** நிமோனியா காய்ச்சல் பாதிப்பிலிருந்து குழந்தைகளை பாதுகாக்க அரசு உறுதிபூண்டிருப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

**3.** வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், கனடாவில் பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சந்தித்து பேசியுள்ளார்.

**4.** மாற்றியமைக்கப்பட்ட பாரத் நெட் திட்டத்தை மாநிலம் முழுவதும் செயல்படுத்திய முதல் மாநிலமாக பஞ்சாப் உருவெடுத்துள்ளது.

**5.** ஆஸ்திரேலியா சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் — அமெரிக்காவின் **Reese Stalder** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் -----

<<<<<<>>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, திம்புவில் பூட்டானின் நான்காவது மன்னர் திரு **Jigme Singye Wanchuck**-ஐ சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த சந்திப்பு ஆக்கப்பூர்வமானதாக அமைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் இந்தியா — பூட்டான் நட்புறவை மேம்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

மேலும், தமது சந்திsப்பின்போது எரிசக்தி, வர்த்தகம், தொழில்நுட்பம், போக்குவரத்து வசதிகள் குறித்து பூட்டான் மன்னருடன் விவாதித்ததாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதனைத்தொடர்ந்து, திம்புவில் நடைபெற்றுவரும் உலக அமைதி பிரார்த்தனை திருவிழாவின் ஒருபகுதியாக அமைக்கப்பட்டுள்ள காலசக்கரத்தையும், பூட்டானின் தற்போதைய மன்னர் திரு **Jigme Khesar Namgyel Wang Chuck** -வுடன் இணைந்து திரு நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்.

புத்த மத துறவிகளும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இந்த காலசக்கரம் புத்த மத கலாச்சார சிறப்பை உலகம் முழுவதும் எடுத்துரைக்கும் முக்கியமான மத சடங்கு என்று பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடி பூட்டானின் தமது இரண்டு நாள் பயணத்தை முடித்துக்கொண்டு இன்று தாயகம் புறப்பட்டார்.

<<<<<<>>>>>>>

உலக நிமோனியா தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இதுகுறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நிமோனியா காய்ச்சல் பாதிப்பிலிருந்து குழந்தைகளை பாதுகாக்க அரசு உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

சமுதாய விழிப்புணர்வு மூலம், இந்நோய் பாதிப்பை கட்டுப்படுத்த SAANS என்ற சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோய் தடுப்பு மற்றும் உரிய நேரத்தில் சிகிச்சை அளிப்பதே இதன் நோக்கம் என்றும், நிமோனியா பாதிப்பு இல்லாத குழந்தை

பருவம் சிறப்பானதாக இருக்கும் என்றும் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இங்கிலாந்து, மெக்சிகோ உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சந்தித்து பேசியுள்ளார்.

கனடாவின் **Ontario**-வில் நடைபெறும் **G7** வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் பங்கேற்க சென்றுள்ள அவர், இன்று கனடாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி அனிதா ஆனந்தை சந்தித்து, இருதரப்பு ஒத்துழைப்பை முன்னெடுத்துச் செல்வது குறித்து விவாதித்ததாக தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று, பிரான்ஸ், பிரேசில், ஜெர்மனி, தென்னாப்பிரிக்கா, உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களையும் சந்தித்து பேசியதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய செயலாளர்களாக புதிதாக ஒன்பது பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் திரு **B V Srinivas** குஜராத் மாநிலத்திற்கான பொறுப்பாளராகவும், திருமதி **Rehana Rayaz Chisti** மகாராஷ்ட்ராவிற்கான பொறுப்பாளராக செயல்படுவார்கள் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு கே சி வேணுகோபால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திற்கான பொறுப்பாளராக திரு நிவேதித் ஆல்வாவும், புதுச்சேரி மற்றும் லட்சத்தீவுகளுக்கான பொறுப்பாளராக திரு **T N** பிரதாபனும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

மாற்றியமைக்கப்பட்ட பாரத் நெட் திட்டத்தை மாநிலம் முழுவதும் செயல்படுத்திய முதல் மாநிலமாக பஞ்சாப் உருவெடுத்துள்ளது.

சண்டிகரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் இதற்கான விருதை அம்மாநில தலைமைச்செயலாளர் திரு கே ஏ பி சின்ஹா பெற்றுக்கொண்டார்.

இத்திட்டத்தை நிறைவேற்றியதன் மூலம், எல்லைப்பகுதிகளில் உள்ள கிராமங்களில் இணையதளம் மற்றும் பிராட்பேண்ட் சேவை வழங்கப்பட்டுள்ளதாக திரு சின்ஹா தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டின் எந்த பகுதியில் இருந்தும் பஞ்சாபின் எல்லைப்பகுதிகளை நேரடியாக கண்காணிக்கும் வசதி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>>

தங்கக்கடத்தலில் ஈடுபட்ட **11** பேர் மத்திய வருவாய் புலனாய்வு பிரிவினரால் மும்பையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மும்பை கல்பாதேவி, **Mazgaon** மற்றும் **Mumbadevi** பகுதிகளில் கடத்தல் தங்கம் உருக்கப்பட்டு, விற்பனைக்கு அனுப்பப்படுவதாக கிடைத்த தகவலின்பேரில், அப்பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில் சுமார் **15** கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவர்களிடமிருந்து, சுமார் **13** லட்சம் ரூபாய் மதிப்புடைய வெள்ளியும் கைப்பற்றப்பட்டு தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>>>

ராணுவ தளவாட கொள்முதல் நடைமுறை விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று ராணுவ தலைமை தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சியில் பேசிய அவர், தற்போதைய சீர்திருத்த காலக்கட்டத்தில் கொள்முதல் நடைமுறை பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

புதிய நடைமுறை வெளியிடப்பட்டிருப்பதாகவும், இது அடுத்த மாதம் இறுதி செய்யப்பட்டு, அடுத்த நிதியாண்டு முதல் செயல்பாட்டிற்கு வரும் என்றும் அவர் கூறினார்.

இந்த புதிய நடைமுறை இறக்குமதியை சார்ந்திருக்கும் நிலையை தவிர்க்க உதவுவதோடு, பாதுகாப்பு செலவினங்களும் குறையும் என்று ஜென்ரல் உபேந்திர துவிவேதி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

மத்திய அரசின் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில், வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் விநியோகிக்கப்படுவதாக, எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாஸ்ஸ் பைட் — சுரேஷ் — 30 Sec.)*

<<<<<<>>>>>>>

கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி அரசு முறைப்பயணமாக இன்று அமெரிக்கா புறப்பட்டு சென்றார்.

வரும் 17-ஆம் தேதிவரை அமெரிக்காவில் தங்கியிருக்கும் அவர், இந்திய — அமெரிக்க ராணுவ ஒத்துழைப்பின் முக்கிய அம்சமாக இருநாட்டு கடற்படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு கடற்படை மற்றும் பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த உள்ளார்.

அமெரிக்க கடற்படை தளங்களையும் அட்மிரல் தினேஷ் திரிபாதி பார்வையிட உள்ளார்.

<<<<<<>>>>>>>

இந்தியா — நேபாளம் இடையிலான எல்லைப்புற பாதுகாப்பு குறித்த ஒருங்கிணைப்புக் குழுவின் வருடாந்திர கூட்டம், புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

இந்திய எல்லைக் காவல் படையின் தலைமை இயக்குனர் திரு.சஞ்சய் சிங்காலும், நோபாள ஆயுதக் காவல் படையின் ஐ.ஜி. திரு. ராஜூ ஆர்யாலும் இந்த கூட்டத்திற்கு தலைமை வகிக்கின்றனர்.

மூன்று நாட்கள் நடைபெறும் இக்கூட்டத்தில், எல்லை தாண்டிய குற்றச் செயல்களைத் தடுப்பது, புலனாய்வுத் தகவல் பரிமாற்றம் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து, விவாதிக்கப்பட உள்ளதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>>

அமெரிக்காவில் பணியாற்றுவதற்கான **H-1 B** விசா சீர்திருத்தங்கள் கடுமையாக பின்பற்றப்படாது என அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், பாதுகாப்பு மற்றும் உற்பத்தித்துறைப்பணிகளுக்கு நீண்டகாலமாக வேலையின்றி இருக்கும் அமெரிக்கர்களை பணி அமர்த்துவது பயன் அளிக்காது என்று குறிப்பிட்டார்.

இத்துறைகளில் அனுபவம் வாய்ந்த வெளிநாட்டவர்களை பணி அமர்த்த வேண்டிய தேவை இருப்பதாகவும் திரு ட்ரம்ப் கூறினார்.

<<<<<<>>>>>>>

பாதுகாப்பு குறித்த புலனாய்வு தகவல்களை அமெரிக்காவுடன் பகிர்ந்து கொள்வதை நிறுத்துமாறு கொலம்பியாவின் பாதுகாப்புப்படைகளுக்கு அந்நாட்டு அதிபர் திரு **Gustavo Petro** உத்தரவிட்டுள்ளார்.

கரீபிய கடற்பகுதியில் போதைப்பொருள் கடத்தல்கார்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக கூறி, கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதை அமெரிக்கா நிறுத்தும் வரை அந்நாட்டிற்கு எந்த புலனாய்வு தகவல்களையும் தெரிவிக்க வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளதாக தமது சமூக வலைதள பதிவில் திரு **Gustavo Petro** குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>>

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் — அமெரிக்காவின் **Reese Stalder** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை **6-7, 6-0, 10-2** என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Aryan Shah — Karan Singh** இணையை வென்றது.

-----------

ஜப்பானில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் நிக்கி கலியாண்டா — தாய்லாந்தின் **Pruchya Isaro** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**(C/O)** ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **7-5, 4-6, 10-5** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Masamichi — Kaichi Uchida** இணையை வென்றது.

**<<<<<<END>>>>>>>**